குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
S.T.C.2555/2024

அ.சா.5

2025-ம் ஆண்டு நவம்பர் 17-ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 04-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரமணி | தொழில் | |
| தந்தை பெயர் | இருசப்பன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.46 மணி,

Accused Venkatachalam present. Advocate Mr.Jegatheesan present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தத்தில் குடியிருந்து, மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். வழக்கமாக நான் காலை 04.45 மணியளவில் நடைபயிற்சிக்கு சென்று 05.30 மணி வரை நடைபயிற்றி செய்வேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு, நடைபயிற்சி சென்றுவிட்டு, காலை 05.30 மணிக்கு எனது கடையை திறந்தேன்.

2. அப்போது அருகிலிருந்தவர்கள் அந்த இடத்தல் பெண்கள் 3 பேர் நடைபயிற்சிக்காக நடந்து வந்தபோது ஓமலூர் பக்கமிருந்து வந்த அரசுபேருந்து அவர்கள் மீது மோதியதாகவும், அதனால் அந்த பெண்கள் கீழே விழுந்ததாகவும், காயமடைந்தவர்களை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனையில் சேர்த்தாகவும் அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

3. சம்பவத்தில் காயடைந்தவர்களின் பெயர், விபரம் எனக்கு தெரியாது. பேருந்தின் பதிவெண் எனக்கு தெரியாது. விபத்தானது கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தம் அருகே எனது கடையிலிருந்து 300 மீட்டர் சாலையில் நடந்ததாக சொன்னார்கள். பின்பு, போலிசார் சம்பவம் நடந்த மறுநாள் வரைபடம் வரைந்து

S
SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:01:17 +0530

விசாரணை செய்தார்கள். விசாரணை செய்ததற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 16.11.2023 ஆம் தேதி காலை 05.30 மணியளவில் காமலாபுரம் – நாலுக்கால்பாளம் சாலையில் கட்டிக்காரனூர் அருகே அ.சா.1, அ.சா.2 ஆகியோர் மேற்படி சாலையின் இடது ஓரமாக கிழக்கு நோக்கி நடந்து சென்றபோது, அதே சாலையில் அதே திசையில் அவர்களுக்கு பின்னால் டி.என்.30 என் 1202 என்ற பதிவெண் கொண்ட தடம் எண்.63 சி என்ற அரசு பேருந்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று அ.சா.1, அ.சா.2–ன் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்துவிட்டு மேற்கண்ட சங்கதிகளை விசாரணையில் கூறிவிட்டு, தற்போது சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

5. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், செவிவழி செய்தியாக தான் எனக்கு தெரியும் என்றாலும் சரி. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் ஓட்டுநர் யாரென்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.45 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:01:20 +0530